**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

அரசு தகவல் அமைப்பு - தரமான மற்றும் சீரான புள்ளி விவரங்களை இணைய வழியில் அளித்தல்-அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தை அரசின் தகவல் களஞ்சியமாக செயல்படுத்துதல்- ஆணைகள்- வெளியிடப்படுகின்றன.

---

**நிதி (த.தொ) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்:** 111
**நாள் :** 15-03-2001.

**பங்குனி 2, விக்கிரம**
**திருவள்ளுவர் ஆண்டு** 2032

**படிக்கப்பட்டது :**

அரசு ஆணை நிலை எண்.548, நிதி (த.தொ) துறை, நாள் 17.12.1999.

******

**ஆணை:**

படிக்கப்பட்ட அரசு ஆணையில் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தை அரசின் தகவல் களஞ்சியமாக **(Government Data Warehouse)** செயல்படுத்த திட்டமிடப்பட்டு அதற்காக இம்மையத்தின் கணினி அமைப்பினை நிலையுயர்த்துவதற்காக ரூ. 25 இலட்சங்கள் ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதனடிப்படையில், கணினி மற்றும் இதர மென்பொருள்கள் ஏற்கனவே வாங்கப்பட்டு அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

2. அரசு தீவிர பரிசீலனைக்குப் பின் நவீன தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி அரசு தகவல் தொகுப்பு விவர மையம், அரசின் தகவல் களஞ்சியமாக 01. 04.2001 முதல் செயல்பட அரசு ஆணையிடுகிறது. மேலும் இத்தகவல் களஞ்சியத்தின் செயல்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது :-

(அ) அரசின் தகவல் களஞ்சியமாக செயல்படும் தகவல் தொகுப்பு விவர மையம் இணையத் தளத்திற்கு தேவையான தகவல்களையும் விவரங்களையும் தொகுத்து வழங்கும்

(ஆ) இணையத் தளத்திற்கு தேவையான புள்ளி விவரங்கள் கணிப்பொறி இணையம் வாயிலாக நேரிடையாக பெறப்பட்டு **(Online** அவை உரிய வழியில் இணய முறையில் **(Web-Enabled)** தயார்படுத்தப்பட்டு இணையத்தளத்தின் மூலம் வெளியிடப்பட ஏதுவாக தேசியத் தகவல் மையத்திற்கு **(National Informatic Centre)** கணினி இணைப்பு **(Connectivity)** மூலம் அனுப்பி வைக்கப்படும். துறைத் தலைவர்களிடமிருந்து விவரங்கள் பெறத் தேவையான படிவங்கள் மற்றும் அவற்றின் கால முறை ஆகியவற்றை இறுதி செய்யும் பணியைப் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை மாநில திட்டக் குழுவின் ஆலோசனையுடன் மேற்கொள்ளும். கூறு ஆய்வுகள் **(Sample Checks)** மூலம் புள்ளி விவரங்களை தரப்படுத்தும் **(Validations)** பணியினையும் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை மேற்கொள்ளும்.

(இ) அரசுத் துறையினருக்கும், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் தேவையான புள்ளி விவரங்களை அவரவர் பயன்பாட்டிற்கு ஏற்ப பகுப்பாய்வு **(Analysis)** செய்து கொள்ளும் வகையில், தொகுக்கப்படாத முதல்நிலைப் புள்ளி விவரங்களாகவும் **(Raw Data)** வழங்கப்படும். மேலும் ஆய்வறிக்கைகள் **(Survey Reports)**, மதிப்பீட்டறிக்கைகள் **(Evaluation Reports)**, முக்கிய ஆவணத் தொகுப்புகள் **(Archives)**, தொடர்புள்ளி விவரங்கள் **(Time Series Data)** ஆகியவையும் இக்களஞ்சியத்தின் மூலம் வழங்கப்படும். தொகுக்கப்படாத முதல் நிலைப்புள்ளி விவரங்களை **(Raw Data)** சம்பந்தப்பட்ட துறைகள் பராமரிப்பதுடன் அவற்றை நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் வெளியிடும். தகவல் களஞ்சியம், அவ்விவரங்களுக்கான இணையத்தளத் தொடர்புகளையும் **(Linkage)** அவ்விவரங்களைப் பல முறைகளிலும் பகுப்பாய்வு செய்து கொள்ளத் தேவையான மென்பொருள் வசதியையும் **(Software Tools)** அரசுத் துறையினருக்கும் இதர பயனாளிகளுக்கும் வழங்கும்.

(ஈ) அரசின் இணையத் தளமான **http://www.tn.gov.in** லிருந்து, இதர துறை/ நிறுவனங்களின் இணையத் தளங்களை அடையத் தேவையான இணைப்பு வசதிகளை **(link)** அரசு தகவல் தொகுப்பு விவர மையமும் தேசிய தகவல் மையமும் இணைந்து செய்து கொடுக்கும்.

(உ) தகவல் களஞ்சியத்திலும் அரசின் இணையத் தளத்திலும் உள்ள விவரங்களை எவரும் சீர்குலைக்காமல் இருக்கவும், உரிய பயனாளிகளுக்கு மட்டுமே விவரங்கள் கிடைக்கச் செய்யும் பொருட்டும், தேவையான பாதுகாப்பு முறைகளை தேசிய தகவல் மையம் ஏற்படுத்தும். தகவல் களஞ்சியத்திற்குத் **(Data Warehouse)** தேவையான மென்பொருள் கருவிகளையும் **(Analytical Software Tools)** தேசிய தகவல் மையம் **(NIC)** அமைத்துக் கொடுக்கும்.

(ஊ) அரசு தகவல் களஞ்சிய வசதிகளையும், தேசிய தகவல் மையத்தால் பராமரிக்கப்பட்டு வரும் அரசு இணையத்தளத்தையும் இணைக்கும் பணியை தேசிய தகவல் மையம் மேற்கொள்ளும். அரசு இணையத் தளத்தின் மூலம் பயனாளிகள் நாடும் விவரங்களைப் பெறத் தேவையான முகப்பு வசதிகளை **(User-Interface)** தேசிய தகவல் மையம் ஏற்படுத்திக் கொடுக்கும்.

(எ) தகவல் களஞ்சியம் திறம்படச் செயல்படத் தேவையான விதத்தில் தலைமைச் செயலக கணினி இணையக் கட்டமைப்பு **(Secretariat Network)** ன் அலைத் தொகுதித் திறனை **(Band Width)** தற்போதுள்ள **64 kbps** என்ற அளவிலிருந்து **2 Mbps** என்ற அளவிற்கு தரம் உயர்த்த தேவையான நடவடிக்கைகளை தேசியத் தகவல் மையமும் தகவல் தொழில் நுட்பத் துறையும் இணைந்து செயல்படுத்தும்.

3. இத்தகவல் களஞ்சியம் செம்மையாகச் செயல்படுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படியும் இத்தகவல் களஞ்சியத்தின் பயன்கள் பயனாளிகளுக்குச் சென்றடைவதைக் கண்காணிக்கும்படியும், அரசு விவர தொகுப்பு மையத்தின் சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர், தேசியத் தகவல் மையத்தின் முதுநிலை

தொழில் நுட்ப இயக்குனர் மற்றும் பொருள் இயல் (ம) புள்ளி இயல் துறை ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. தகவல் களஞ்சியத்திற்கான விவரங்களை நன்கு கூர்ந்தாய்வு செய்து, உரிய படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலமுறையில் இணைய வழியாக **(Online Transmission)** தகவல் களஞ்சியத்திற்கு அனுப்பிவைக்கத் தேவையான சிறப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறு அனைத்து அரசுச் செயலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் அரசுசார் நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஆர். சந்தானம்**
**அரசுச் செயலாளர்.**

(ஆளுநரின் ஆணைப்படி)

பெறுநர்:

சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர், அரசு தகவல் தொகுப்பு விவர மையம், சென்னை-25
ஆணையர், பொருளியல் மற்றும் புள்ளி இயல் துறை, சென்னை-6.
முதுநிலைத் தொழில் நுட்ப இயக்குநர், தேசியத் தகவல் தொடர்பு மையம், சென்னை-90.
செயலாளர், தகவல் தொழில் நுட்பத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
டாக்டர் எம். அனந்த கிருஷ்ணன், துணைத் தலைவர், மாநில தகவல் தொழில் நுட்ப முனைப்புக் குழு, சென்னை-5.
உறுப்பினர் செயலர், மாநில திட்டக் குழு, சேப்பாக்கம், சென்னை-5.
இயக்குநர், மதிப்பீடு மற்றும் செயல் முறை ஆராய்ச்சித் துறை, சென்னை-108.
அனைத்து அரசுச் செயலாளர்கள்,
அனைத்துச் செயலகத் துறைகள்(அ. ந.. பிரிவுகள் )
நிதித் துறையிலுள்ள அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள்
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை),சென்னை-18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை),சென்னை-18.(பெயரில்)
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை-35.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை- I), சென்னை-35.(பெயரில்)
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை- I I), சென்னை-6.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை- I I), சென்னை-6.(பெயரில்)
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி.), சென்னை-9/மதுரை.
கருவூலக் கணக்குகள் ஆணையர், சென்னை-15.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை-9.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தெற்கு), சென்னை-35.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (வடக்கு), சென்னை-79.
சம்பளக் கணக்குகள் அலுவலர், (உயர்நீதி மன்ற வளாகம்),

சென்னை-104.
சம்பளக் கணக்குகள் அலுவலர், மதுரை-625 001.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
பதிவாளர் உயர்நீதி மன்றம், சென்னை-104.
அனைத்து பல்கலைக் கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.
அரசுக்குச் சொந்தமான அனைத்து நிறுவனங்கள்/சட்டப்படியான வாரியங்கள். ஆணையாளர்,
சென்னை/மதுரை/கோயம்புத்தூர்/திருச்சிராப்பள்ளி/சேலம்/திருநெல்வேலி. மாநகராட்சிகள்

நகல் பெறுநர் :-

செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-9.
ஆளுநரின் செயலாளர், ஆளுநர் மாளிகை, சென்னை-32.
அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களின் நேர்முக செயலாளர், சென்னை-9.
வளர்ச்சி ஆணையர் அவர்களின் நேர்முகச் செயலாளர், சென்னை-9.
திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை செயலாளர் அவர்களின் நேர்முகச் செயலாளர், சென்னை-9.
அரசு நிதித் துறை செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை-9.
முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை-9.
செயலாளர், முதலமைச்சர் செயலகம், சென்னை-9.
சிறப்புப் பணி அலுவலர், திட்டம் மற்றும் வளர்ச்சி (விவர வங்கி)த் துறை, சென்னை-9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

(ஆணைப்படி அனுப்பலாகிறது)

பிரிவு அலுவலர்